# மாதிரி அரையாண்டுத் தேர்வு–2023–2024

வகுப்பு 12 | பொருளியல் | வகுப்பு எண் | | | | | |

காலம்:2.30

**Part – I** மதிப்பெண்கள்:90

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 x 1 = 20

1. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது ?

ஆ) விலை கோட்பாடு ஆ) வருவாய் கோட்பாடு இ) அங்காடி கோட்பாடு ஈ. நுண்ணியல் கோட்பாடு

2. கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி.

அ. பண அளிப்பு ஆ. சொத்துக்கள்

இ. வருவாய் ஈ. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

3. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது .................

அ. ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 ஆ. மார்ச் 1 முதல் ஏப்ர ல் 30

இ. மார்ச் 1 முதல் மார்ச் 16 ஈ. ஜனவரி 1 முதல் டிசம்ப ர் 31

4. மிக அதிக அளவிலான தேசிய வருவாய் .................. லிருந்து வருகிறது.

அ. தனியார் துறை ஆ. உள்துறை இ. பொதுத்துறை ஈ. எதுவும் இல்லை

5. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

அ. பூஜ்யம் ஆ. ஒன்று இ. இரண்டு ஈ. நேர்மறை

இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

6. கீன்ஸின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது ................... ஆகும்.

அ. வட்டி வீதம் ஆ. விளைவுத்தேவை இ. தொகுத்தேவை ஈ. தொகு அளிப்பு

7. குறைவான வட்டி வீதம்

அ) நுகர்வைக் குறைக்கும் ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்

இ) சேமிப்பை ஊக்குவிக்கும் ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்

8. மொத்த வருவாய்க்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு

அ) நுகர்வுச் சார்பு ஆ) சேமிப்பு சார்பு இ) முதலீட்டுச் சார்பு ஈ) மொத்த தேவைச் சார்பு

9. ஆர்பிஐ –ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) டில்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ) பெங்களுரு

10.பணவீக்கத்தின் பொழுது பயனடைபவர்கள் யார் ? அ) கடன் பெற்றோர்கள்

ஆ) கடன் வழங்கியவர் இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர் ஈ) அரசு

11. வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ––––––––– ––––––––– வை த்திருப்பதில்லை .

அ) வங்கி உரிமம் ஆ) அரசு அங்கீகாரம் இ) பணச்சந்தை அங்கீகாரம் ஈ) நிதி அமைச்சக அனுமதி

12. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை ?

அ. வங்கி ஆ. அணு ஆற்றல் இ. மருந்து உற்பத்தி ஈ. காப்பீடு

13. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்

அ) தாள் தங்கம் ஆ) பங்களவுகள் இ) தன் விருப்ப ஏற்றுமதி தடைகள் ஈ) இவை ஏதுமில்லை

14. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு

அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) வடகொரியா

15. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை ?

அ) தனிநபர் வருமான வரி ஆ) நிறுவன வரி இ) விவசாய வருமான வரி ஈ) கலால் வரி

16. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது ?

அ) சமத்துவம் விதி ஆ) நிச்சயத்தன்மை விதி இ)வசதி விதி ஈ) எளிமை விதி

17. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது ?

அ) சிந்து–கங்கை ஆ) வட இந்திய இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும்

18 . சர்வோதாயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார் ?

அ) மஹாத்மா காந்தி ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன் இ) எஸ்.என்.அகர்வால் ஈ) எம்.என்.ராய்

19. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது –––––––––––.

அ) முதல்நிலை விவரம் ஆ) இரண்டாம் நிலை விவரம்

இ) வெளியிடப் பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

20. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் ......................

அ) புள்ளிவிவரம் ஆ) பொருட்கள் இ) புள்ளியியல் ஈ) கணிதம்

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. பொருளாதாரம்' என்பதன் பொருள் யாது ?
22. தனிநபர் வருமானம் என்றால் என்ன ?
23. முழு வேலைவாய்ப்பு வரையறு.
24. முடுக்கி – வரையறு.
25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு.
26. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன ?
27. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
28. இ–கழிவுகள் என்றால் என்ன ?
29. வரி, கட்டணம் வேறுபடுத்துக.
30. உடன் தொடர்பு என்பதனை வரையறு.

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. இரு துறை சுழல் ஓட்டமாதிரியினை விளக்குக.
32. தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.
33. தொகு தேவைஎன்றால் என்ன ? அதன்கூறுகளைக்கூறுக.
34. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
35. மீள்பணவீக்கம் பற்றி விளக்குக ?
36. இறக்குமதி பங்களவு என்றால் என்ன ?
37. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.
38. நீர் மாசுக்கான காரணங்கள் யாவை ?
39. வரி விதிப்பு விதிகளை விவரிக்க.
40. புள்ளியியலின் பணிகள் யாவை ?

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. (அல்லது)
    தேசிய வருவாய் கணக்கிட்டில் உள்ள சிரமங்கள் யாவை ?
42. வேலையின்மைகளின் வகைகளை விவரி (அல்லது)
    நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.
43. பணத்தின் பணிகளை விளக்குக. (அல்லது)
    வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.
44. <u>பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ? விளக்குக.</u> (அல்லது)
    பொருளாதார முன்னேற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.
45. இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ – ன் பங்கினை விவாதிக்க. (அல்லது)
    பொது நிதியின் எல்லைகளை விளக்குக.
46. பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி. (அல்லது)
    புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.
47. புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக. (அல்லது)
    திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

**A.Alexis.PG.Tr.Don Bosco Hr.Sec.School,Varadharajanpet. Ariyalur.Dt, 621805 .Cell:9543776128**